







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 2 இதழ் 8 5.03.2026



ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# முத்துக்கள்

## ஞானம் அளிக்கும் அவதார லீலைகள்

(நாவல்பாக்கம் ஸ்ரீஉவே வாஸுதேவாசார்யார், திருவனந்தபுரம்)

பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பல அவதாரங்கள் செய்து பல லீலைகள் செய்கிறான்; அவற்றுள் ஜ்ஞானம் அளிப்பதான அவனது அவதார-லீலைகள் சிறப்பானவை.

- ஸ்ரீஹயக்ரீவ- அவதாரத்தில் ஜ்ஞானத்துக்கு மூலமான வேதங்களை அருளினான்.
- ஹம்ஸ-அவதாரத்தில் வேதப் பொருளை உபதேசம் செய்தான்.
- வராஹ-அவதாரத்தில் வேதஸாரமான சரணாகதி உபாயத்தை அருளி ஜ்ஞானப்பிரான் என்றே பெயர் பெற்றான்; மேலும் ஸ்ரீவராஹபுராணம் அருளினான்.
- மத்ஸ்ய-அவதாரத்தில் வேதங்களை மீட்டு அருளினான்; மேலும் மத்ஸ்யபுராணம் அருளினான்.
- கூர்ம-அவதாரத்தில் கூர்ம புராணம்.
- ஸ்ரீக்ருஷ்ண - அவதாரத்தில் பகவத்கீதை.

ஜ்ஞானம் அளிக்கும் அவதாரங்களை ஆழ்வார் தீர்த்தம் என்கிறார்; நம்மை பரிசுத்தமாக்க வல்லது என்று அர்த்தம்; ஒரு ஜீவனை நல்ல ஜ்ஞானம் மூலம்தானே சுத்தமாக்க முடியும்! "மாவாகி ஆமையாய் மீனாகி மானிடமாம் தேவாதிதேவ பெருமான் என் தீர்த்தனே" என்று அந்த அவதாரங்களைச் சொல்லும்போது முதலில் “மா" என்றது பரிமுகப் பெருமானின் அவதாரம்தான்!



*2*

**ஹயக்ரீவ அவதாரத்திற்கு இரண்டு சிறப்புகள் உள்ளன**. ஒன்று மத்ஸ்யாவதாரத்தில் வேதங்களைக் காப்பாற்றியும், ஆசார்யராய் திகழ்ந்ததும், மற்றைய ஹம்ஸ, நாராயண கீதாசார்ய அவதாரங்களில் தத்வோபதேசம் செய்திருந்த போதிலும், ப்ரபஞ்ச ச்ருஷ்டிக்கு முன்பே ப்ரஹ்மாவுக்கு உபதேசம் செய்து வேதங்களை மீட்டுக் கொடுத்து ப்ரஹ்மாவை படைப்புச் செயலில் ப்ரவர்த்தித்தது ஸ்ரீஹயக்ரீவ அவதாரத்தில்தான் என்பதை அனைவரும் அறிவர்.

*****************************************************************

*3*

எவனொவருவன் மீது பிறக்கும் போதே **மதுஸூதனன் கடாக்ஷம்** படுகிறதோ, அவன் ஸத்வ குணம் நிறைந்தவன் என்றும், மோக்ஷ புருஷார்த்தத்தையே விரும்புவான் என்கிறது. பன்னிரு திருநாமத்திலும் மதுஸூதன் என்ற நாமம் இடம் பெற்றுள்ளது.

*****************************************************************

*4*

**நாராயணாஷ்டாக்ஷரத்தின் பெருமை**

(ஸ்ரீஹயசிரோபாக்யானம் ப.எண் 31)

ஒரு சமயம் நாராயண அஷ்டாக்ஷரத்தின் ஜபப்பயன் குறித்து நாரதர் எம்பெருமானிடம் வினவினார். அதற்கு ஸ்ரீமந்நாராயணன் "யாவனொருவன் அத்யந்த பக்தியோடு தனிமையில் நாராயணத் தியானத்தில் மூழ்கி வேறெதனையும் விரும்பாதவனாய் இந்த நாராயண அஷ்டாக்ஷர ஜபத்தால் என்னிருப்பிடமான பரமபதத்தை வந்தடைவான்" என்று தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு ஜனார்தனனிடம் யாவனொருவனுக்கு பக்தி உள்ளதோ அவருக்கு மற்ற மந்திரங்கள் தேவையில்லை. திருவெட்டெழுத்தே அனைத்தையும் சாதிக்கவல்லது.

*****************************************************************

*5*

**ஸ்ரீதேவநாத ஸ்தோத்ரம்.**

**இஃது ப்ரம்ஹாண்ட புராணாந்தர்கத அஹீந்த்ரபுர மாஹாத்மயாத் ஸங்கலிதம்**

**த்யாநம் (அர்ச்சனைக்கு முதலில் ஸேவிக்க வேண்டும்)**

**ஸத்யஜ்ஞாந ஸுகஸ்வரூபம் அமலம் பூஷாஸஹஸ்ரோஜ்வலம்**
**த்ரயக்ஷஸ்ஸங்கரபூஜிதம் நிபம் ஸம்ஸார தாவாநலம் I**
**பிப்ரத்வேணுகராம்புஜம் மதுரிபும் ப்ரஹ்லாத ரக்ஷாமணிம்**
**ஸேவ்யம் பந்நக வைநதேயவரதம் ஸ்ரீதேவநாதம் பஜே ||**

(அர்ச்சனைக்குப் பிறகு ஸேவிக்க வேண்டும்)

**ய இதம் ஸ்ருணுயாத் நித்யம் தேவநாத ப்ரபாவஜம்**
**படந்வாப்யக்ரதஸ்தஸ்ய ஸர்வபாபை: ப்ரமுச்சதே I**
**புத்ரார்தீ லபதே புத்ரம் தனார்த்தீ லபதே தனம்**
**ஆயுஷ்காமீ ததாயுஷ்யம் ப்ராப்னோதி ஜகதீஸ்வரம் II**

**********************************************************************

## 6

## ஸ்வாமி தேஸிகனின் 7 கட்டளைகள்

"1. ஒருபோதும் கோபமுள்ளவன் (க்ரோதீ) ஆகாதே
2. தனக்கும் பிறக்கும் நலமே விழை
3. அவமானத்திலும் பொறுமை காப்பாய்
4. தற்புகழ்ச்சி, பிறர் இகழ்ச்சி விடுவாய்
5. ஒரு கணமும் அதைச் சொல்லாய்
6. எம்மானிடம் ஆத்மரக்ஷணம் வைக்கப்பட்டவனாயிரு
7. அவனுக்குத்தகுந்த பூஜையை சக்திக்குத் தக்கபடி செய்."

என்ற ஏழு கட்டளைகளை தம் சிஷ்யர்களுக்கு ப்ரியமான ஹிதமாக உபதேசித்த தேசிகனை வணங்குகிறேன்

**************************************************************************

## 7

இருப்பதும் மறைவதும் ஈசன் செயல். வாழ்க்கைக்கான சகல வசதிகளுடன் பல்லாண்டு வாழ்ந்த பின் வாழ்க்கையில் வெறுப்பு ஏற்படுவதுண்டு. அம்மாதிரியே, வாழ்க்கை வசதி ஏதும் இல்லாதவர் களுக்கும் வாழ்க்கையில் வெறுப்பு ஏற்படுவது இயற்கை. ஆனால், இருவரும் முடிவு செய்வது 'எம்பெருமானுடைய திருவடிகளே சாசுவதமானவை' என்பதே.

**********************************************************************

## 8

நாம் செய்ய வேண்டியதென்ன? ஸதாசாரியனை அடைந்து தத்வ ஹித புருஷார்த்தங்களைத் தெரிந்து கொண்டு, அனுஷ்டித்து ஈச்வரன் அனுக்ரஹத்திற்குப் பாத்திரமாக வேண்டும் என்பதுதான்.

ஈச்வரனுக்கும் அவனடியார்க ளுக்கும் தொண்டு புரிந்து அதன் மூலம் ஆனந்தமடைவதே பரம புருஷார்த்தம். ஆழ்வார்கள் அவர்களின் பாசுரங்கள் மூலமாக இதை எடுத்து சொல்லியிருக்கிறார்கள்.

**********************************************************************